**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**

பெறுகைக் கைந்நூலுக்கான
# பிற்சேர்ப்பு - 15

வெளியிடப்பட்ட திகதி – 2007-11-01

**(பண்டங்களும் கட்டுமான வேலைகளும் - 2006 பெறுகை வழிகாட்டு நெறிகளுடன் பயன் படுத்துதல் வேண்டும்.)**

பெறுகை வழிகாட்டு நெறிக் குறிப்பீடு: 5.4.14
பிணக்குத் தீர்த்தல்
**பிரிவுகளை இப்பிற்சேர்ப்பு மேலோங்கி நிற்கும்.**

## தேசியப் பெறுகை முகவர் நிலையம்

பெறுகை வழிகாட்டுநெறிக் குறிப்பீடு 5.4.14

**பிணக்கைத் தீர்த்துவைத்தல்**

ஒப்பந்த உடன்படிக்கைகளிலிருந்து எழுகின்ற எல்லாப் பிணக்குகளும் இலங்கையின் 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நடுத்தீர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க (வெற்றியீட்டிய விலைக்கேள்வியாளர் வெளிநாட்டவரொருவராகவிருக்குமிடத்து, வெளிநாட்டு நிதியளிப்பு முகவர் நிலையத்தினால் வேறுவகையாகத் தேவைப்படுத்தப்பட்டாலொழிய) கையாளப்படுதல் வேண்டும். இப்பயன்பட்ட தனிவேறான வாசகமொன்று விலைக்கேள்வி ஆவணங்களிலும் ஒப்பந்த உடன்படிக்கையிலும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

நடுத்தீர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சர்வதேச வர்த்தகப் பணிமனையின் (சபை) அல்லது சர்வதேச வியாபாரச் சட்டத்தின மீதான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் (சவசஐநாஆ) நடுத்தீர்ப்பு விதிகள் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகளின் வேறேனும் தொகுதி, பயன்பாட்டுக்காக விதந்துரைக்கப்படுகின்றது.
நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக நடுத்தீர்ப்பிடம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.